# முதலமைச்சரும் தீபாவளி வாழ்த்தும்!

## கவிப்பேரரசு வைரமுத்து பதில்!






**ஊடகத்தார் கேள்வி:**

தீபாவளிக்கு முதலமைச்சர் வாழ்த்துச் சொல்லவில்லை என்று சொல்கிறார்களே?

**கவிப்பேரரசு வைரமுத்து பதில்:**

**மகளிர்க்கு உரிமைத்தொகை வழங்கிய தன்மூலம் ஒவ்வொரு குடும்பத்திற்கும் முதலமைச்சர் வாழ்த்துச் சொல்லிவிட்டாரே! ஒரு பழமொழி உண்டு: "சொல் என்பது பித்தளை; செயல் என்பது தங்கம்." பித்தளையால் வாழ்த்துவதைவிட தங்கத்தால் வாழ்த்தியிருக்கிறார் தங்கத் தளபதி. சொல்லால் வாழ்த்துவதைவிட செயலால் வாழ்த்துவது சிறப்பல்லவா?**

## வலைதளங்களில் வலம் வருவது!




## புவியின் துருவங்களில்

# பனிப்பாறைகள் வேகமாக உருகுகின்றன!

### ஐரோப்பிய விண்வெளி ஆராய்ச்சி மையம் எச்சரிக்கை!

பெர்லின், நவ. 14 -

புவியின் துருவ பகுதிகளில் பனிப்பாறைகள் உருகி வரும் நிகழ்வு மிகவும் ஆபத்தான கட்டத்தை தொட்டு விட்டதாக ஐரோப்பிய விண்வெளி ஆராய்ச்சி மையம் எச்சரித்துள்ளது.

பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் ஒரு பூமி துருவம் என்ற தலைப்பில் மாநாடு நடைபெற்றது. இந்த மாநாட்டில் துருவ பகுதியில் அமைந்துள்ள நாடுகள் மற்றும் பனிப்பாறைகள் உள்ள 40 நாடுகளின் தலைவர்கள் பங்கேற்றனர்.

பின்னர் பேட்டியளித்த ஐரோப்பிய விண்வெளி ஆராய்ச்சி மையத்தின் இயக்குநர் ஜோசப் ஆஸ்ட்டா பாஸ்டர் பூமியின் வட மற்றும் தென்துருவங்களில் பனிக்கட்டி உருகுவது மிகவும் மோசமான நிலையை எட்டிவிட்டதாக எச்சரித்துள்ளார். குறிப்பாக ஆர்டிக் மண்டலத்தில் பனிக்கட்டிகள் மிகவும் வேகமாக உருகி வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

பனி உருகுதல் தொடர்பாக தங்கள் மையத்தின் செயற்கைகோள்கள் எடுத்த புதியபடங் களையும் அவர் வெளியிட்டுள்ளார்.

உலக நாடுகளுக்கு காலநிலை மாற்றம் தற்போது பெரிய சவாலாக மாறியுள்ளதாக ஐரோப்பிய விண்வெளி மையத்தின் தலைவர் ஜோசப் தெரிவித்துள்ளார்.

இந்த நூற்றாண்டின் மத்தியிலாவது கார்பன் உமிழ்வை குறைத்தாக வேண்டும் என்பது இவரது கருத்தாகும்.

பனிப்பாறைகள் உருகுவது வேகம் பிடித்திருப்பதால் கடல் நீர்மட்டம் இன்னும் வேகமாக உயர்வதாகவும் அவர் கவலை தெரிவித்துள்ளார். காலநிலை மற்றம் என்ற சவாலை எதிர்கொள்ள தனிப்பட்ட ஒவ்வொருவரின் பங்களிப்பும் தேவை என்று அவர் கூறியுள்ளார்.

அத்துடன் அரசியல் தலைவர்கள் உடனடியாக முக்கிய முடிவுகளை எடுக்க வேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## முத்தமிழறிஞர் கலைஞரின் மைத்துனரும் கழக மூத்த முன்னோடியுமான

# கோயில் திருமாளம் தட்சிணாமூர்த்தி 101-ஆவது பிறந்த நாள்!

### 'முரசொலி' வாழ்த்தி மகிழ்கிறது!

**சென்னை, நவ. 14-**

**திருவாரூர் மாவட்டம் நன்னிலம் ஒன்றியம் - கோயில் திருமாளத்தைச் சேர்ந்த கழகத்தின் மூத்த உறுப்பினர் கோ.தட்சிணாமூர்த்தி அவர்களுக்கு 101-வது பிறந்த நாள்.**

**இதனையொட்டி அவரை முரசொலி வாழ்த்தி வணங்குகிறது.**

கழக மூத்த முன்னோடி கோ.தட்சிணாமூர்த்தி அவர்கள் தலைவர் கலைஞர் அவர்களின் துணைவியார் தயாளு அம்மையாரின் மூத்த சகோதரர் ஆவார். இவர் தமது இளமைக் காலந் தொட்டு கழகத்தில் ஈடுபாடு கொண்டவர். கோ.தட்சிணாமூர்த்தி அவர்கள் கழகத்தின் மூத்த உறுப்பினரும் கோவில் திருமாளம் முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவராகவும், மாவட்ட வேளாண் ஒழுங்குமுறை விற்பனை குழுவின் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர் ஆவார். இவர் தலைவர் கலைஞர் அவர்கள் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் தன்னை பங்கு எடுத்துக் கொள்ள செய்தவர் ஆவார்.

குறிப்பாக இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் பங்கு பெற்று சிறைவாசம் அனுபவித்தவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். மேலும் கழகத் தலைவர் தளபதி அவர்கள் கைகளால் பொற்கிழி பெற்றவர் என்பதும் கூடுதல் சிறப்பாகும்.

திருமாளம் கோ.தட்சிணாமூர்த்தி அவர்களைப் பற்றி மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் தனது நெஞ்சுக்கு நீதி புத்தகத்தில் பக்கம் 241ல் நீண்ட நினைவுகளை பதிவு செய்திருப்பது மேலும் பெருமைக்கு உரியதாகும்.

கோ.தட்சிணாமூர்த்தி அவர்களின் பிறந்தநாளையொட்டி அவருக்கு 'முரசொலி' பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்து மகிழ்கிறது.

# சென்னையில் 150 டன் பட்டாசு கழிவுகள் அகற்றம்!

சென்னை, நவ. 14–

தீபாவளி பண்டிகை முடிந்த நிலையில் தமிழகம் முழுவதும் டன் கணக்கில் பட்டாசுக் கழிவுகள் குவிந்துள்ளன. இந்த நிலையில் சென்னையில் பட்டாசுக் கழிவுகளை அகற்றும் பணியில் 19,600 தூய்மைப் பணியாளர்கள் ஈடுபட்டுள்ளனர். மாநகராட்சிக்கு உட்பட்ட 15 மண்டலங்களிலும் பட்டாசுக் கழிவுகளை சேகரிக்க ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. கழிவுகளை கொண்டு செல்வதற்காக மண்டலத்திற்கு 2 வாகனங்கள் என மொத்தம் 30 வாகனங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் காலை முதலே பட்டாசுக் கழிவுகளை அகற்றும் பணியில் மாநகராட்சி பணியாளர்கள் ஈடுபட்டு வந்த நிலையில், சென்னையில் இதுவரை 150 டன் பட்டாசுக் கழிவுகள் அகற் றப்பட்டு இருப்பதாக மாநகராட்சி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## நன்னியூர் ராஜேந்திரன் தலைமை! இல.பத்மநாபன் வாழ்த்துரை!

# மேற்கு மண்டல நெசவாளர் அணி நிர்வாகிகள் கூட்டம்!

### அமைச்சர்கள் க.பொன்முடி - மு.பெ.சாமிநாதன் - ஆர்.காந்தி சிறப்புரை!

திருப்பூர், நவ. 14-

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டையொட்டி கோவை தெற்கு, கோடை வடக்கு, கோவை மாநகர், திருப்பூர் தெற்கு, திருப்பூர் வடக்கு, ஈரோடு வடக்கு, ஈரோடு தெற்கு, சேலம் கிழக்கு, சேலம் மேற்கு, சேலம் மத்தியம், தருமபுரி கிழக்கு, தருமபுரி மேற்கு, கிருஷ்ணகிரி கிழக்கு, கிருஷ்ணகிரி மேற்கு, நாமக்கல் கிழக்கு, நாமக்கல் மேற்கு, நீலகிரி உள்ளடக்கிய மேற்கு மண்டல நெசவாளர் அணி மாவட்ட மாநகர, தலைவர், துணைத் தலைவர் மற்றும் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கூட்டம் நாளை (15.11.2023 - புதன் கிழமை) காலை 10.00 மணியளவில் கலைஞர் அறிவாலயம், பலவஞ்சி பாளையம் பிரிவு, திருப்பூர் - 08 எனும் முகவரியில் நடைபெறுகிறது.

கூட்டத்திற்கு நெசவாளர் அணித் தலைவர் நன்னியூர் ராஜேந்திரன் தலைமை வகிக்கிறார்.

ஓ.ஏ.நாகலிங்கம், க.பழனிச்சாமி, காஞ்சி தி.அன்பழகன், பரணி கே.மணி, நெல்லை, சொ.பெருமாள், சிந்து ரவிச்சந்திரன், வசந்தம் ஏ.சி.ஜெயக்குமார், ஜி.வி.மணிமாறன், ஆ.ராமசாமி, மு.கோவிந்தசாமி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

எஸ்.எல்.டி.ப.சச்சி தானந்தம் வரவேற்கிறார். கே.எம்.நாகராஜன் நிகழ்ச்சியை ஒருங்கிணைக்கிறார்.

இக்கூட்டத்தில் அமைச்சர்கள் முனைவர் க.பொன்முடி, மு.பெ.சாமிநாதன், ராணிப்பேட்டை ஆர்.காந்தி ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

திருப்பூர் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் இல.பத்மநாபன் வாழ்த்துரை வழங்குகிறார். கே.எஸ்.பி.ராஜேந்திரன் நன்றி கூறுகிறார்.

இக்கூட்டத்தில் அனைத்து நிர்வாகிகளும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு தலைமை கழகத்தின் சார்பில் கேட்டுக் கொள்ளப்படுகிறது.